# இலங்கையில் சைவசமயத்தின் தொன்மை
## பிராமிக் கல்வெட்டினை முதன்மையாகக் கொண்டது

[1]இ. டினோசா, [2]பா. டிலக்ஷனா

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையை இந்துசமய வரலாற்றின் அடிப்படையில் நோக்கும்போது வரலாற்றுச் சின்னங்களின் அடிப்படையில் சைவமதமே இலங்கையின் தொன்மையான மதமாக கருதப்படுகின்றது. அந்த வகையில் தொல்பொருள் சான்றுகளின் அடிப்படையில் இலங்கையின் சைவசமயத்தின் தொன்மை வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளமையானது சைவசமய வரலாறு இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளமையை தெரியவைக்கின்றது. குறிப்பாக கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.4ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டப்பரப்பினுள் கிடைக்கப்பெறுகின்ற பிராமிச்சாசனங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் தமிழருடைய பாரம்பரியத்தையும் அவர்கள் ஆரம்பகாலங்களில் இருந்து இலங்கையில் பரிணாமம் அடைந்த வரலாற்றினையும் எடுத்துக்காட்ட உதவுகின்றது. அந்த வகையில் பிராமிக் கல்வெட்டின் மூலம் சைவசமயத்தின் பழமை எந்தளவிற்கு இலங்கை வரலாற்றில் முக்கியத்துவத்தினை பெற்றுக் கொண்டது என்பதனை முதன்மைப் படுத்தும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** சைவம்.இலங்கை. பிராமிக் கல்வெட்டு. தொல்பொருள் சின்னங்கள்

### அறிமுகம்

தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியிலே விளங்கி வந்த பல வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இன்று இந்துமதம் என்னும் பொதுப்பெயரைப் பெற்றுள்ளன. எனவே இந்து மதத்தின் வரலாறு பிறமதங்களின் வரலாற்றைப் போன்று குறிப்பிட்ட ஒரு காலத்தில் இருந்து குறிப்பிட்ட ஒரு வழியே சென்ற வரலாறு ஆகாது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்திய துணைக் கண்டத்திலிருந்து மக்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கிய காலத்திலிருந்து இந்து மதக் கருத்துக்களும் கிரியைகளும் நிலவி வந்துள்ளன எனலாம்.

சைவமத வளர்ச்சியில் ஒஸ்ரிக், திராவிட, ஆரிய மொழிபேசுவோரின் பங்களிப்பே முக்கியமானது. இலங்கையில் நடாத்தப்பட்ட அண்மைக்கால ஆய்வுகள் இலங்கையிலும் தென்னிந்தியாவைப் போல வரலாற்றுக் கால நாகரிகத்திற்கு வித்திட்டவர்கள் திராவிடர்களாகிய பெருங் கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் குழுவினர் என்பதனை வெளிக் கொண்டு வந்தன. ஈழத்தமிழரின் ஆரம்பகால பண்பாட்டு விடயங்களைப் பெரிதும் வெளிக் கொண்டுவருவதற்கு தொல்லியல் ஆய்வுகளும், தொல்பொருட் சின்னங்களும் உதவியுள்ளது. இத்தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் ஈழத்தமிழரது பண்பாட்டு வரலாற்றில் இரு வகையில் முக்கியம் பெறுகின்றன எனக் கொள்ளலாம்.

01. தொல்லியல் கண்டுபிடிப்புக்களை பொறுத்தமட்டில் அச்சான்றுகளை இலங்கைத்

1,2 நான்காம் வருடம் வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

[1]0772541085, *Dinosharaj@gmail.com* [2]*0772218276, diluxana21@gmail.com*

தமிழருக்குரிய சான்றாகப் பார்க்காது, தென்னிந்தியத் தமிழருடன் இணைத்துப் பார்க்கின்ற தன்மையே அதிகளவில் பின்பற்றப்பட்டு வந்தன, இருப்பினும் இத்தகைய முறையில் இருந்து முற்றிலும் விலகி இலங்கைத் தமிழர் அவர்களுடைய வாழ்வியல் இந்நாட்டுக்குரியது என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்து வருகின்றமை சிறப்பானது.

தொல்பொருட் சான்றுகள் ஈழத் தமிழரது பண்பாட்டு வரலாறு தமிழகச் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்து வந்ததென்பதனைச் சுட்டிக் காட்டும் அதேவேளை ஈழத்தமிழருக்கென்று தனித்துவமான பண்பாடு பண்டுதொட்டு இருந்து வந்தது என்பதனையும் கோடிட்டுக் காட்ட உதவுகின்றன.

இத்தகைய தொல்பொருள் சான்றுகள் தமிழருடைய மதம் சார்ந்த வரலாற்றை எடுத்துக் கூறுவதில் அதிகளவு பங்களிப்பைச் செலுத்தியுள்ளதுடன் மதம் சார்ந்த வரலாற்றை எடுத்துக் கூறுவதில் கல்வெட்டுக்கள், நாணயங்கள், கட்டிட, சிற்பக் கலைகள் என்பன முக்கியமான தொல்லியற் சான்றுகளாகத் திகழ்கின்றன. இவை இலக்கியங்களைப் போல் தொடர்ச்சியாக விரிவாக அறிவதற்கு உதவிபுரியாவிடினும், தொன்மையான பண்பாட்டு விடயங்களினையும் பெருமளவு நம்பகத்தன்மை வாய்ந்தவையாகவும் காணப்படுவதனால் இலக்கிய ஆதாரங்களை விட தொல்பொருட் சான்றுகள் தொன்மையான வரலாற்றம்சங்களை அறிவதற்கு அதிகமாக உபயோகிக்கப்பட வேண்டியது எனலாம்.

"ஈழத்தமிழரது மதங்களின் வரலாற்று உண்மைகளை ஆராய முற்படும் ஒருவர் அதற்கு அடிப்படை ஆதாரமாக இன, மத, உணர்வோடு பௌத்த, சிங்கள மக்களுக்குச் சார்பான கட்டுக்கதைகளையும், ஐதிகங்களையும் கொண்டெழுந்த தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்களை அடிப்படைச் சான்றாதாரமாக பயன்படுத்துவதைக் காட்டிலும், நம்பகத்தன்மை வாய்ந்த தொல்பொருட் சின்னங்களை பயன்படுத்தும் போதுதான் தமிழருக்குரிய பழமையான சமய வரலாற்றினை வெளிக் கொண்டுவர இயலும் எனலாம்"

இவற்றின் மூலம் தொல்பொருள் சின்னங்களின் தனித்தன்மையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது. குறிப்பாக தொல்பொருட் சான்றுகளுள் ஆதிகால ஈழத்து வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு பிராமிக் கல்வெட்டுக்கள் அதிகளவு உதவியுள்ளன. அந்தவகையில் பிராமி எழுத்துமுறையானது கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள், செங்கற்கள், முத்திரைகள், நாணயங்கள் எனப் பல்வேறு தொல்பொருட்கள் மூலம் பிரதிபலிக்கின்றன. இருப்பினும் பிராமி எழுத்துப் பொறித்த கல்வெட்டினை கொண்டு அதன் மூலம் ஈழத்தில் வெளிப்படுத்தப்படும் சைவத்தின் தொன்மை தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றது

**இலங்கை வரலாற்றில் பிராமிக் கல்வெட்டின் முக்கியத்துவம்**

இலங்கைநாட்டின் வரலாற்றின் ஆரம்பத்தில் தோன்றிய வரிவடிவத்தைப் பிராமி வரிவடிவம் என அழைப்பது வழக்கம். இவை பெரும்பாலும் குகைகளில் அமைந்ததால் பிராமிக் குகைக் கல்வெட்டுக்கள் எனவும் பெயர்பெற்றன. நம்நாட்டில் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுவதைப் போன்றே தமிழ்நாட்டிலும் பிராமிக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை தமிழ் பிராமிக் கல்வெட்டு என அழைக்கப்படுகின்றன. இவைகளில் மிகப்பழைய கல்வெட்டுக்கள் பாண்டி நாட்டில் காணப்படுகின்றன.

புவியியல் ரீதியாக இவ்விரு பிரதேசங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் மிக அண்மித்து இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றித் தென்னிந்தியக் கல்வெட்டு அறிஞரான பேராசிரியர் மகாலிங்கம் கருத்துரைக்கையில்,

"ஈழத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ் மொழியின் எச்சங்கள் காணப்படலாம். இந்நோக்கில் இக்கல்வெட்டுக்கள் இதுவரை எல்லோராலும் மிகுந்த அக்கறையுடன் ஆராயப்படவில்லை, ஆனால் இத்தகைய ஆய்வு நல்ல பயனை அளிக்கும்" என்றார்.

நம் நாட்டுக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பேராசிரியர் லக்ஷ்மன் பெரேராவும் இக்கருத்தினை வலியுறுத்தினார். ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்தவர்களில் பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் பெர்னாண்டோ, கலாநிதி கருணாரத்தின ஆகியோர் முன்னணியில் ஆய்வு செய்த ஆய்வாளர்கள் எனலாம். அதன்பின்னர் பிராமிக் கல்வெட்டுகள் ஆய்வு செய்வதிலும் அவை தொடர்பாக ஆக்கங்கள் வெளியிடுவதிலும் தமிழ் வரலாற்றாசிரியர்களான, பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர்சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் தமது ஆக்கங்கள் மூலம் தமிழர் வரலாற்றினை வெளிக் கொணரத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஏறத்தாழ 1500ற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையுடைய கல்வெட்டுக்கள் தென்னாசியாவில் வேறு எந்த நாட்டிலும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. என்பதும் ஈழவரலாற்றின் தொன்மையினை விளங்குவதற்கான எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இலங்கையில் கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் அண்மைக்காலம் வரை காணப்படுகிறது. இவற்றுள் கி.பி.5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை எண்ணிக்கையில் அதிகமாகும். இதன் பின் கிடைக்கப் பெற்ற ஒருசில தமிழ், சிங்கள, சமஸ்கிருத கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் கி.பி8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கி.பி 10ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ், சிங்கள மன்னர்கள் வணிகக் கணங்கள் என்பவற்றின் ஆதிக்கம் வளர்ந்த நிலையில் கல்வெட்டுக்கள் வகையிலும், தொகையிலும் அதிகரித்தன. கி.பி 10ஆம் நூற்றாண்டின் பின்னர் இவற்றின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்தன. இத்தகைய வரலாற்றுப் பின்னணி இலங்கை வரலாற்றில் பிராமிக் கல்வெட்டுகள் எத்தகைய தொன்மை வாய்ந்த வரலாற்று மூலம் என்பதனை தெளிவு படுத்துகின்றது.

### பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் சைவ சமயத்தின் தொன்மை

பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்த மக்கள் கி.மு 43 ஆம் நூற்றாண்டில் "சிவ" வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதற்கு அக்கால மக்களது வரலாற்று எழுத்தாவணங்களில் வரும் "சிவ" என்ற முன்னொட்டுப் பெயர் சிறந்த சான்றாக உள்ளது. இதற்கு இக்கால மன்னர்களதும் சிற்றரசர்களதும் பெயர் களும் விதிவிலக்காக இருக்கவில்லை. இலங்கையில் ஆட்சி செய்த தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்கு ஒரு பிராமணன் கோபூதி என்பவன் ஆசிரியராகவும், வைத்தியனாகவும் கடமையாற்றினான் என இரு பிராமிக் கல்வெட்டுக்களால் அறியலாம். இதன் மூலம் அரசவையில் கூட பிராமணர் (சைவ சமயத்தவர்) பங்கு இன்றியமையாததாக இருந்தமையைக் காணலாம்.

உதாரணம் - 1. மஹரஜஸ தெவனபியஸ தமினி திஸஸ வெஜ பமண அகாபுகிய லெணெ ஸகஸ ஸிவபுதிய ஸகய லெனெ ஸகஸ (தேவநம்பிய காமிணிதிஸ்ஸ மகாராசாவின் வைத்தியன் பிராமணன் கோபூதியின் குகை சங்கத்துக்கு கொடுக்கப்பட்டது. சிவபூதியும் சேர்த்து கொடுத்த குகை சங்கத்துக்கு) மஹாரஜஸ தெவன பியஹ ஆசிரிய பமண கொழகிய வெணெ (தேவநம்பிய மகாராவின் ஆசிரியன் பிராமணன் கோபுதியின் குகை)

இச்சான்றினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், மஹாவம்சத்திலும் தேவநம்பிய மன்னனுக்கு முன் ஆண்ட பண்டுவாச தேவ மன்னன் ஆகியோர் பிராமணர்களைத் தங்கள் சோதிடாதிகளாகவும் ஆசிரியர்களாகவும் புரோகிதர்களாகவும் கொண்டிருந்தனர். எனக் கூறப்பட்டுள்ளது.[3]

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளின் பல சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்த அரசர்கள், இளவரசர்கள் ஆகியோருள் "சிவ" என்ற பெயரை பெற்ற பலர் பிராமிசாசனங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1. ரஜஸிவ புத அய ஸிவஹ புத அய ஸிவஹ மஹஸ்தவதெ வெயெ (சிவ மன்னன் மகன் சிவ இளவரசனுடைய மகாதர்சனக் குகை)
2. தேவநம்பிய திஸ்ஸனுடைய சகோதரன் துஸதர மன்னனுடைய மகன் சிவ இளவரசன் மகன் திஸதிர இளவரசனுடைய மகன் காமினி சிவனால் அமைக்கப்பட்ட மஹாஹ/தர்பெனக் குகை.[4]

இரண்டாவது கல்வெட்டிலே குறிப்பிடப் பட்டுள்ள காமினி சிவனுடைய நகரின் பெயர் சிவநகரம் என இன்னொரு கல்வெட்டு கூறுகின்றது. இச் சான்றினை மகாவம்சமும் உறுதிப்படுத்துகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலே சில மன்னர்களும் இளவரசர்களும் "சிவ" என்ற பெயரினைப் பெற்றிருந்தமை கி.மு 4 - 3 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த கிரிகண்ட சிவ மன்னன், மூடசிவ மன்னன், மகாசிவ மன்னன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அரசர்கள், சிற்றரசர்கள் தவிர கி.மு 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80 க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் வரும் "ஸிவ, கால ஸிவ, குதஸிவ, ஸிவகுத்த, ஸிவபூதி, மகாஸிவ போன்ற பெயர்களினைச் சுட்டிக்காட்டலாம். இப்பெயர்களுக்குரியவர்கள் வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.[5]

இவர்கள் பெரும்பாலும் பௌத்த மத விசுவாசிகளாகச் சுட்டிக் காட்டப் பலர் முற்பட்டாலும் கூட ஆரம்பகாலத்தில் சிவ வழிபாட்டினை பின்பற்றிய ஒரு பகுதி மக்கள் இலங்கையில் வாழ்ந்துள்ளமையினை எடுத்துக் காட்டுவதாகவே அமைகின்றது.

ஆனால் சிவ பிராமிக் கல்வெட்டுக்களில் இப்பெயர் தமிழில் சிவன் என எழுதப் பட்டிருப்பது அந்தக் கல்வெட்டை பொறிப் பித்தவர்கள் தமிழர்கள் என்பதனையும் அவர்கள் சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதனையும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. இதற்கு கி.மு. 1ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இரு கல்வெட்டுக்களை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான அதில் உள்ள பெயரை பிராகிருத தொழில் பெயர் என்ற பொருள்பட ஸிவந என வாசித்துள்ளார்.[6]

இருப்பினும் ஒரு கல்வெட்டில் வரும் பெயர் தமிழில் ஆண்மகனைக் குறிக்கும் "அன்" என்ற விகுதியுடன் முடிவதால் அப்பெயரைச் ஸிவன் என வாசிப்பதே பொருத்தமாகத் தெரிகிறது. இரண்டாவது பெயர் கல்

வெட்டில் உள்ள எழுத்தின் அடிப்படையில் பரணவிதானவினால் "ஸிவநா" என்று வாசிக்கப்பட்டதற்குப் பதிலாக "ஸிவநே" (சிவனே) என்று வாசிப்பதே பொருத்தமாகும். இப்பெயர்களின் இறுதியில் வரும் எழுத்து வடபிராமிக்குரிய "ந" வாக இருந்தாலும் அது தமிழில் சிவன் என்ற ஒலிப் பெறுமானத்துடன் எழுதப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் சமகாலத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழுக்குரிய "ன" என்ற எழுத்து பல கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் சில கல் வெட்டுக்களில் "ன" என்ற எழுத்திற்குப் பதிலாக வடபிராமிக்குரிய "ந" என்ற எழுத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளதனைக் காணலாம்.

இதற்கு உதாரணமாக சங்க இலக்கியத்தில் வரும் அதியன் என்ற பெயர் அங்குள்ள ஜம்பை என்ற இடத்திற் கிடைத்த பிராமிக் கல்வெட்டில் அதியந் என்று எழுதப்பட்டுள்ளதையும் அது அதியன் எனத் தமிழில் பொருள் கொள்ளப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். இதனால் மேற்கூறப்பட்ட கல்வெட்டில் வரும் பெயர் "ஸிவநே" அல்லது "ஸிவநா" என்று எழுதப்பட்டிருந்தாலும் அது தமிழில் "சிவன்" அல்லது "சிவனே" என்ற மொழிப் பெறுமானத்தைக் கொடுக்கும் வகையில் எழுதப்பட்டதென்பதிற் சந்தேகமில்லை.

இப்பெயர்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இராசு காளிதாஸ் அவர்கள் தனது கருத்தினை கூறும்போது சிவன் என்ற தொன்மையான பெயர் முதன் முதலில் ஈழத்திலே தான் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்கள் முக்கிய சான்றுகள் என குறிப்பிட்டார்.

ஈழத்திற்கு சைவசமயம் பரவுவதற்கு தமிழகத் தொடர்பே முக்கிய காரணம் எனக் கூறப்பட்டாலும் சமகாலத்தில் சிவன் என்ற பெயர் சங்க இலக்கியத்திலோ அல்லது தமிழகக் கல்வெட்டிலோ காணப்படவில்லை. இதன் அடிப்படையில் ஈழத்தவரது வர லாற்றில் சிவ வழிபாடானது தமிழர்கள் வரலாற்றில் மிகவும் தொன்மையாக ஆரம்பகாலங்களிலிருந்தே நிலவிவந்தமை இதன்மூலம் விளங்கிக் கொள்ளலாம். சாதாரண மக்கள், ஏனைய சமயத்தவர், அரசர், சிற்றரசர்கள எனப் பலரும் சைவ சமயத்திற்கும் சிவவழிபாட்டிற்கும் ஆதரவு வழங்கியதுடன் தமது வாழ்வில் இருந்து சைவசமயத்தை பிரிக்கமுடியாத அளவிற்கு பற்றுதலோடு விளங்கினர் என்பதனை உணர்த்துகின்றது.

சிவவணக்கத்தோடு நெருங்கிய தொடர்புடைய வணக்கம் முருகவணக்கம் ஆகும். ஆதி இலங்கையில் முருக வணக்கமும் மிகப்பழமையானது என்பதை எடுத்துக் காட்டும்வகையில் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் முருகனது வேலைக் குறிக்கும் "வேலு" என்ற சிறப்புப் பெயர் காணப்படுகின்றது. வேல் வழிபாடு மிகவும் தொன்மையடைந்தது. தமிழ் நாட்டில் ஆதிச்ச நல்லூர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழந்தமிழர் பண்பாடாகிய பெருங்கற்கால பண்பாட்டைச் சேர்ந்த தொல்பொருட் சான்றுகளில் முருகனது வேலும் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாடு இந்நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பரவியிருந்தது என்பதனைப் புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு போன்ற இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதற்கும் ஆதிச்சநல்லூர்க் கலாசாரத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. எனவே

பொம்பரிப்பு ஆராய்ச்சியை விரிவுபடுத்தல் மூலம் சைவசமயத்தின் தொன்மை வெளிப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்துக் கொள்ளும்.

சைவசமயமானது சிவனை முழுமுதற்கடவுளாக போற்றுகின்ற சமயம் ஆதலால், ஈழத்தின் தொன்மையான சான்றுகள் அதிகமாக சிவனுடன் தொடர்புபட்டவையாகவும் அத்தொடர்பு பல இடங்களில் பரவி இருந்தமையைக் காணலாம். அந்தவகையில் ஈழத்தில் காணப்படும் பல தொல்லியல் சான்றுகள் சிவவழிபாட்டோடு தொடர்புடைய ஏனைய பல அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றமையைக் காணலாம்.

“சிவ வணக்கத்தோடு இணைந்து காணப்படும் சூல வழிபாடும் வரலாற்று ரீதியில் நோக்கும் போது மிகத் தொன்மையான வழிபாடு என்பது புலனாகும். ஒரு தலைச் சூலமானது வேலைப்போல் இருதலை முத்தலைச் சூலங்களும் வழிபாட்டுப் பொருட்களாக விளங்கியதை ஆதிய இந்திய நாணயங்கள் எடுத்துக்காட்டுகின்றன இருதலைச் சூலம் புத்தள மாவட்டத்தில் உள்ள பொம்பரிப்பு என்ற பெருங்கற்கால சின்னமாகிய பானையில் குறியீடாகக் காணப்படுகின்றது. இதன் இரு பக்கமும் பிறை போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன. இத்தகைய இருதலைகுறியீடு ஈழத்துப் பிராமிக்கல்வெட்டுக்களில் குறியீடாகவும் காணப்படுகின்றது.[8]

இலங்கையில் காணப்பட்ட பெருங்கற்காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களில் இம்முத்தலைச் சூலம் குறியீடாகவும் காணப்படுகின்றது. ஆனைக் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட உலோக முத்திரையிற் காணப்படும் மூன்று குறியீடுகளில் இக்குறியீடு இரண்டில் காணப்படுகின்றது. இக்குறியீடுகள் பழைய பாண்டிய - ஈழத்து நாணயங்களில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

சைவசமயம் சிவநெறி என்றெல்லாம் அழைக்கப்படும் நெறி சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும்சமயம் ஆகும்.. இன்றைய சைவ சமயத்தின் இறைநெறிகளில் ஒன்றாக விளங்கும் சைவம் சைவசித்தாந்த கோட்பாட்டின் அடிப்படையில் வளர்ச்சி பெற்று வந்துகொண்டிருக்கின்றது..

வழிபாட்டு முறைகளில் ஐயனார் வழிபாடும் ஒன்றாகும். சங்கஇலக்கியங்களில் சிவன் “சாத்தன்” என விளிக்கப்படுகின்றான். இன்றும் கேரளாவில் செல்வாக்குடன் விளங்கும் “சபரிமலை ஐயப்பன்” வழிபாடே இச்சாத்தன் வழிபாடு ஆகும். கிராமங்களின் எல்லைகளில் ஊரின் காவற் தெய்வமாக ஐயனார் வழிபடப்படுகின்றார். இத்தெய்வம் குதிரையில் ஏறி இரவில் ஊர்காவலை மேற்கொள்கிறது என நம்பப்படுகின்றது. இத்தகைய வழிபாட்டு அம்சங்களில் சிவன் பிரதான மூலகர்த்தாவாக கொள்ளப்படுவதுடன் ஏனைய தெய்வங்களின் ஒருமித்த செயற்கையாக சிவபெருமானை முதன்மைப்படுத்துவதை காணலாம்.

**பிற தொல்பொருள் சான்றுகள் வெளிப்படுத்தும் சைவசமயத்தின் சிறப்புக்கள்.**

தொன்மையான சான்றுகளாக கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், பாவனைப் பொருள்கள், கட்டட சிற்ப ஓவியங்கள் எனபல சான்றுகள் அதில் அடங்குகின்றன. பிராமிக் கல்வெட்டின் மூலம் சைவத்தின் தொன்மையானது, இலங்கையில் பௌத்தம் வருவதற்கு முன்னரே வேர்கொள்ளத் தொடங்கின என்பதனை அறிந்துகொண்டாலும், ஏனைய சான்றுகளின் மூலம் சைவசமயத்தின் தொன்மை வெளிப்பட்டு நிற்கின்றதும் கவனிக்கத்தக்க விடயம்

எனலாம்.

ஆதி தொன்மையான சான்றுகளுள் நாண யங்கள் மிகவும் முக்கியமானது எனலாம். இந் நாணயங்களில் பொறிக்கப்பட்ட சூலம், நந்தி, நத்திபாதம், உடுக்கு என்பன சிவ வழி பாட்டின் தொன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.[10] சிவ என்ற வாசகத்தை உடைய சதுரமான செம்பு நாணயங்கள் சங்ககால வணிக, சமய தொடர்பை கந்தரோடையுடன் தொடர்புபடுத்துவதற்கு உதவியுள்ளது. இலங்கையின் உடுத்துறை உட்பட்ட பல இடங்களில் கிடைக்கின்ற நாணயங்களில் பெண் உருவத்துடன் சிவசின்னங்கள் இணைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்க விடயம் எனலாம். திரிசூலமும், மழுவும் சிவனின் முக்கிய படைக்கலங்களாகும். புறநானூறு சிவபிரானை

ஏற்றுவன் உயரிய எரிமருள் அவிர்சடை மாற்றருங்கணிச்சி மணிமிடற்றோன். "என்றும் "சீற்றம் நிறைந்த கூற்றம் என்றும் ஒரேகணை கொண்டு முப்புரத்தை எரித்து அமரர்க்கு வெற்றி தந்த கறைமிடற்று அண்ணல்" என்றும் கூறுகின்றது".[11]

இலங்கையைப் பொறுத்தவரை இச்சிவசின்னத்தின் தொடக்கத்தைப் பெருங் கற்கால மட்பாண்டங்களில் குறியீடாகக் காணமுடிகிறது. காலப்போக்கில் இவற்றின் தொடர்ச்சியைத் தமிழர்கள் வெளியிட்ட பல்வேறு காலகட்டத்திற்குரிய நாணயங் களிலும் காணமுடிகிறது. தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்திற்கிடைத்த கி.மு 2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயம் ஒன்றின் முன்புறத்தில் இடப்புறம் பார்த்து நிற்கும் மனிதனுக்கு முன்னால் திரிசூலமும் பின்புறத்தில் மல்லக திஸிஹ என்ற பெயரும் காணப்படுகின்றது.

இதில் வரும் 'மல்ல" என்ற பெயர் சமகால இலங்கை, தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் மல்லன் என்று தமிழில் எழுதப்பட்டுள்ளதோடு "திஸ" என்ற பெயர் சமகாலப் பாளி இலக்கியத்திலும், பிராமிக் கல்வெட்டுகளில் தமிழருக்குரிய பெயராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இந்நாண யத்தை தமிழ்ச் சிற்றரசன் அல்லது குறுநிலத் தலைவன் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறமுடியும்.

சைவர்களில் வரும் சிவன், சக்தி வழி பாட்டினை ஒத்த ஆண், பெண் தெய்வங்கள் மேற்காசியாவிலே அதிலும் குறிப்பாக லிகிளின் சாசனங்களே வரும் தீர்கஸ் எனும் தெய்வப்பெயர் துர்க்கை எனும் பதத்தினை போல இருப்பதாக மானிடவியல் ரீதியாக கருத்தை வெளியிட்ட வி.சிவசாமி எடுத்துக கூறியுள்ளார்.

இலங்கையில் காணப்படும் அநுராத புரத்திலுள்ள பன்னிரண்டு சைவக் கோயில் களின் அழிபாடும் திருக்கோணேஸ்வர எச்சங்கள், திருக்கேதீஸ்வர கோயில் அழி பாடுகள் கண்டியிலுள்ள கட்டுக்கலைப் பிள்ளையார் கோயில், மாத்தளை தெற்கில் உள்ள ஈஸ்வரர் கோயில் யாழ்ப்பாணத்தில் உள்ள மாவிட்டபுரம் கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் உள்ளிட்ட பல கட்டிடச் சான்றுகள் சைவசமயத்தின் தொன்மை இலங்கையில் அநேகமான இடங்களில் பரவி இருந்ததுடன் சைவசமயத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்படாமல் பரந்து வாழ்ந்துள்ளனர். என்பதனை அறியலாம்.[12]

**நிறைவுரை**

இவ்வாய்வுக் கட்டுரையினைத் தொகுத்து நோக்கும் போது ஈழத்தில் சைவசமயத்தின் தொன்மையானது கிறிஸ்துக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இருந்து நிலவி வந்தமையினை விளங்கிக் கொள்ளலாம் அத்தோடு இலங்கையில் கிடைக்கின்ற பழமையான தொல்பொருள் சான்றான

பிராமிக் கல்வெட்டுக்களில் உள்ள பிராமி எழுத்து முறையினைக் கொண்டு இலங்கையில் சைவ சமயமானது இலங்கை மக்களது வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாத தொடர்பினை கொண்டிருந்தமையை விளங்கிக் கொள்ளலாம்

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் சிறப்பானது இலக்கியத் தொல்பொருள் சான்றுகள் மூலம் வெளிப் படுத்துவதில் இருந்து கிறிஸ்துக்கு முற்பட்ட காலம்- முதல் ஈழத்தவரது வாழ்வியலுடன் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியாகவும் வியாபித்திருந்தமையினை விளங்கிக் கொள்ள லாம்.

**அடிக்குறிப்புகள்**

1. உலக இந்துமாநாட்டுச் சிறப்புமலர், *(2003)*, இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு, பக் 9 16.
2. சிந்தனை, *(1983)*, இதழ் *1*, தொகுதி *1*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி ப-59.
3. இந்திராபாலா,கா., *(1978)*, ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கைப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம், யாழ்ப்பாணம், ப. 02.
4. மேலது, ப.*03*.
5. மேலது, ப.*11*.
6. Paranavithana, S, 1970, **Insciption of Ceylon Early Brahmi Inscriptions,** The department fo Archoeology, pp. 59-60.
7. சிந்தனை.,*(1976)*,தொகுதி *01*, இதழ்*02*, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி, ப. *43*.
8. சிந்தனை., *(1985)*, தொகுதி I, இதழ் *03*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, ப. *43*.
9. பத்மநாதன்,சி,*(1996)*, ஈழத்து இந்துசமய வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி. பக்.*278-310*.
10. கிருஷ்ணராசா,செ., *(1998)*, தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர்பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு,பக்.*51-52*.
11. மேலது, ப. *13*.
12. இந்திரபாலா, கா., *(1992)*, இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை, குமரன் பதிப்பகம், சென்னை, ப.*23*.
13. சிற்றம்பலம்,சி.க., *(1983)*, பிராமிக்கல்வெட்டுக்களும்தமிழும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ப. *59*.
14. புஷ்பரட்ணம், ப., *(2001)*, இலங்கைத் தமிழரின் பண்டைக் கால நாணயங்கள், பவானி பதிப்பகம், சென்னை.
15. பத்மநாதன், சி., *(2000)*, இலங்கையில் இந்துகலாசாரம், பகுதி1, இந்துசமயப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.
16. சிற்றம்பலம், சி.க., *(1995)*, ஈழத்து இந்துசமயவரலாறு, பாகம்1 ,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி. ப.278-*279*.
17. இந்திரபாலா, கா., *1970*, இலங்கையில் திடாவிடக்கட்டிடக்கலை , கொழும்பு, ப.*23*.